யுத்தத் தீவிரப் போக்குக்கு எதிராக சர்வதேச நிலைப்பாடு

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் மேற்கு நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டு அதன் மீது தடை விதித்தன.

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் சம தரப்பு அந்தஸ்து என்ற இணக்கப் பாட்டுடன் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டிருக் கையில், அவற்றில் ஒரு தரப்பின் அந்தஸ்து நிலையைக் கெடுக்கும் விதத்தில் தடையை விதித்து, அமைதி முயற்சிகளைக் குழப்பாதீர்கள் என்று தமிழர் சார்பு அமைப்புகள் பலவும் சுட்டிக்காட்டியபோது அதைக் காதில் வாங்காமல் நடந்து கொண்டது ஐரோப்பிய சமூகம்.

கொழும்பின் பொய்ப் பரப்புரைகளுக்கு எடு பட்டு, புலிகள் மீது தடை விதித்து, அமைதி முயற்சி களுக்கு எஞ்சியிருந்த கொஞ்ச நஞ்ச வாய்ப்பையும் சிதறடித்ததில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பும் புறக்கணிக்கத் தக்கதல்ல.

அத்தகைய நடவடிக்கைகளினால் கிடைத்த வாய்ப்பான சூழ்நிலையைப் பயன்படுத்தி, அமைதி முயற்சிகளுக்கு நிரந்தர சாவுமணி அடித்த கொழும்பு, இப்போது யுத்த வெறித் தீவிரத்தில் சந்நத உருக்கொண்டு நிற்கின்றது.

அமைதி வேளையில் புலிகள் மீது நடவடிக்கை எடுத்த மேற்குலகு, இப்போது யுத்த சமயத்தில், போர்த் தீவிரத்தில் துடிக்கும் இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்கின்றது.

இலங்கையின் யுத்த தீவிரச் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்தும், அமைதி முயற்சி வழி களுக்குத் திரும்பும்படி வலியுறுத்தும் விதத்திலும் இலங்கைக்கு எதிராகச் சில பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்திமிக்க நாடான ஜேர்மன் கேட்டிருக்கின்றது.

பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கான ஜேர்மனியின் சமஷ்டி அமைச்சர் ஹெய்டிமேரி விஸோரக் ஸியோல் அம்மையார் இவ்விடயம் குறித்து வெளிப்படையாகவும் காட்ட மாகவும் கருத்துக் கூறியிருக்கின்றார்.

முக்கியமாக இலங்கைக்கான விசேட வரிச் சலுகைகளை நிறுத்துவதற்கு அவர் முன்மொழிந் திருக்கின்றார்.

இலங்கையில் தைக்கப்படும் ஆடைகளை வரிச்சலுகை வழங்கி இறக்குமதி செய்கிறது அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும்.

ஐரோப்பிய ஒன்றியம் மட்டும் வருடாந்தம் நூற்றியிருபது கோடி டொலருக்கு (சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கு) இலங்கையிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கின்றது.

இலங்கைக்கு, ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக் காவும் விசேட வரிச் சலுகைகளை வழங்குவ தாலேயே மற்ற நாடுகளோடு போட்டி போட்டுக் கொண்டு இந்த இரு தரப்புகளுக்கும் தைத்த ஆடைகளை இலங்கையால் தாராளமாக ஏற்றுமதி செய்ய முடிகின்றது. இந்த வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் ரத்துச் செய்யுமானால் இலங்கையால் பிற நாடுகளுடன் போட்டிபோட்டு குறைந்த கட்டணத்தில் அத்த கைய ஆடைகளை ஏற்றுமதி செய்ய முடியாது. இலங்கையின் ஆடை உற்பத்தித் தொழிற்சாலை கள் படுத்துவிடும். இலங்கையில் உள்ள நூற்றுக் கணக்கான ஆடைத் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா நடத்தவேண்டி நேரும். ஆடைத் தொழிற் சாலைகளில் பணிபுரியும் லட்சத்துக்கும் அதிக தொழிலாளர்கள் வேலை இழந்து நடுவீதிக்கு வருவர். நாட்டின் பொருளாதாரமே நெருக்கடிக்குள் மூழ்கும்.

ஐரோப்பிய ஒன்றியம் மட்டும் வருடாந்தம் நூற்றியிருபது கோடி டொலருக்கு (சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கு) இலங்கையிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கின்றது. இதே போன்ற பெருந்தொகைக்கு அமெரிக்காவுக்கும் தைத்த ஆடைகள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த இரண்டு தரப்புகளும், இலங்கை விசேடமாக வழங்கிவரும் வரி இல்லாத சலுகையை ரத்துச்செய்து, ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி விடயத்தில் மற்றைய நாடுகளுடன் நியாயமான போட்டியில் ஈடுபடுங்கள் என்று இலங்கைக்கும் கூறி ஒதுங்குமானால் இலங்கையில் உள்ள பல நூறு ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளை நிரந்தரமாக இழுத்து மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிடும்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பொதுவாக உள்ள இறக்குமதி வரியை இலங்கையும் செலுத்தி, அங்கு ஆடைகளை ஏற்றுமதி செய்வதாயின் அது இலங்கைத் தொழிற் சாலைகளுக்குக் கட்டுப்படியாகாது. இத்துறையில் போட்டிபோடும் ஏனைய நாடுகளுடன் இலங்கையால் தாக்குப் பிடிக்க முடியாது.

ஆகவே, பொருளாதார விடயத்தில் இலங்கை யின் முக்கிய 'குடுமியை' தனது கையில் பிடித்து வைத்துக் கொண்டே ஜேர்மன் இப்போது நியாயத் தைப் பேச நிலைநிறுத்த முற்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு வழங்கிவந்த இந்த வரிச்சலுகைத் திட்டம் 2008 உடன் நிறைவுபெற இருக்கும் இச்சமய த்தில் இவ்விவகாரம் குறித்து அமெரிக்காவுடன் பேசி ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்று ஜேர்மனி முன்மொழிவது இக்கால கட்டத்தில் முக்கியமான ஒரு திருப்புமுனையாகும்.

இதேசமயம், யுத்த முனைப்பில் இலங்கை தீவிரம் காட்டுவதால் இலங்கைக்கான தனது புதிய அபிவி ருத்தி மற்றும் உதவித் திட்டங்களை ஜேர்மன் அடியோடு இடைநிறுத்தியிருக்கின்றமை குறித்தும் ஜேர்மன் அமைச்சர் விளக்கியிருக்கின்றார்.

கொழும்பின் யுத்தத் தீவிரப் போக்குக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் காத்திரமான நிலைப்பாடு கருக்கட்டி வருவதையே ஜேர்மன் அமைச்சரின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

- உதயன்

உறுமல் ஒலி

ஒரு போதும்

ஓயாது

ஒரு விடுதலை

வரட்டும்

பிறகு

பாயாது

Editorial: Eelamnation.net

Greetings to Imam, the new Member of Parliament

The appointment of a Muslim member to the Parliament to represent the Tamil speaking people of the north and the east of Sri Lanka is most welcome. This move by the Tamil leadership and the Tamil National Alliance marks yet another stage, though minimally, in making up for the remiss in the treatment of the Tamil speaking Muslim people in the recent past. This is indeed a major step towards mending the relations between the Tamil leadership and Muslim Tamils and healing the wounds. It is our hope that this will open the way for the Muslim people who were forced in 1990 to leave their homes in Jaffna, Mannar and Mullaitheevu to return to their traditional homes, a move, which this journal has always advocated. Tamil and Muslim Parliamentarians representing the Tamil speaking people of the north east is not a new phenomenon.

Persecuted by the Portuguese, isolated by the Dutch and devastated by the brutal attacks on them in the tragic Sinhala- Muslim race riots of 1915, the Muslims, even after independence from colonialism, were wary of identifying themselves with any particular ethnic group but chose to display a low to moderate political profile in the years to come.

We congratulate Raseen Mohamed Imam on his appointment as Member of Parliament. A lawyer by profession, the 60 year-old Mr. Imam, originally from Jaffna, has been a member of the Tamil Federal Party since 1978. He was also a member of the Jaffna Municipal Council. He has been practising law in Colombo. The quality of the contribution of the Tamil Muslims to the socio economic life of the people especially in the areas of trade, agriculture, fisheries, the professions, law, public services, politics, education and Tamil culture has been far in excess of the proportion of their population—a fete to be applauded and not penalized for.

Successive Sri Lankan governments have tried to drive a wedge between the Muslim Tamils and the non Muslim Tamils.

A recent report, titled "Sri Lanka Muslims: Caught in the Cross Fire", the International Crisis Group (ICG), a multinational non-governmental organisation engaged in reporting on conflict situations, stated:"……the LTTE, in particular, needs to revisit its dealings with the Muslims if it is to gain any credibility in a future peace process in which Muslims are involved".

Successive Sri Lankan governments have tried to drive a wedge between the Muslim Tamils and the non Muslim Tamils. For example, while the distinctions between the low country Sinhalese and the Kandyan Sinhalese were removed the distinctions between the Sri Lankan Tamils, the Moors and the Indian Tamils were glaringly shown in census reports as being ethnically different. Even in the recent struggle between the armed forces and the LTTE in the east, the Muslims were used as human shields. Mosques in the east in the past had been attacked and the LTTE blamed as usual. Consequently, the Muslims have become increasingly marginalized as was evidenced in the recent APRC process, though a farcical spectacle. The Sinhala colonisation of their traditional homelands and the de-merger of the north and the east have made them increasingly apprehensive. Despite this, the majority of them have steered clear of Islamic fundamentalism, although there is considerable radicalization amongst the youth in the east.

The Sri Lankan Moors, as the Muslims are called, prefer to be known as a separate ethnic group. They are the descendents of the Arab traders of the pre- Portuguese era, some of them caught up within Sinhala enclaves in the south, the Tamil converts to Islam in the north and the east and traders who migrated from south India.

In his well researched paper, 'Towards a North-Eastern Consensus', Dr Devanesan Nesiah states: "The strategy for collective action must be based on the reality that the Sri Lankan Tamils, Muslims and Indian Tamils, though socially and politically distinct, share many common interests, apart from the common interests that bind the entire population of Sri Lanka. It is clear that the LTTE-directed armed struggle has gained significant political advance, though at great cost. But there are limits to what can be achieved through armed struggle. Many gains can come only through political coalitions engaged in democratic processes". This is indeed is a challenge to the Tamil leadership.

We wish Mr. Raseen Mohamed Imam all that is best in his endeavours to bring about a solution to the national question.